| **உள்ளடக்கம்** | **பக்க இல.** |
|---|---|
| அறிமுகம் | 01 |
| நோக்கு | 02 |
| செயற்பணி | 02 |
| தொழிற்பாடுகள் | 03 |
| உற்பத்தியளவு | 03 |
| பதவியணி | 04 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் | 04 |
| பயிற்சியளித்தல் மற்றும் திறன் விருத்தி | 08 |
| சேவையினை மேம்படுத்துதல் | 09 |
| 2015 இல் வெளியிடப்பட்ட புதிய ஒழுங்குவிதிகள் | 09 |
| 2015 இல் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அறவிடப்பட்ட அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 10 |
| வருமானப் பகுப்பாய்வு -2015 | 12 |
| i. வருமானம் 2015 | |
| ii. வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்துதல் | |
| செலவினப் பகுப்பாய்வு -2015 | 13 |
| i. மீண்டுவரும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம் | |
| ii. நிதி மூலங்கள் | |
| வருமானமற்றும் செலவினப் பகுப்பாய்வு | 15 |
| கடந்த 5 வருடத் தரவுகளின் பகுப்பாய்வு | |
| கடந்த 5 வருடங்களில் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் உருவாக்கப்பட்ட வருமானங்கள் | 16 |
| கடந்த 5 வருடங்களில் உருவாக்கப்பட்ட வருமானங்கள் மற்றும் அனுமதிப் பத்திரங்களின் மீளாய்வு | 17 |
| அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு-29601 | 18 |
| இணைப்பு 01- அமைப்புமுறை கட்டமைப்பு | 19 |

# இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

## அறிமுகம்

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நாட்டின் இறக்குமதியையும் ஏற்றுமதியையும் கட்டுப்படுத்தும் நோக்கில்இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் 1969 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது.தற்போது இத்திணைக்களம்47 வருடங்களைப் பூர்த்திசெய்துள்ள அரசாங்கத் திணைக்களமாகும். தற்போது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு மாத்திரம் வரையறுக்கப்படாமல் பல்வேறு துறைகளினூடாக தமது தேசிய பொறுப்பை நிறைவேற்றி வருகின்றது.

பிரதானமாக தேசிய பாதுகாப்பு,சுகாதாரம், சூழலின் ஸ்திரத்தன்மை மற்றும் பொது மக்களின் நலன் என்பன முன்னுரிமையாகக் கருதப்படுகின்றன.

இறக்குமதி, ஏற்றுமதி வர்த்தகம், அரசாங்கக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதும், அதேபோன்று தீங்கான பொருட்களை இலங்கைச் சந்தைக்குள் பரவுவதும் கட்டுப்படுத்தப்படுகின்றது. சட்டத்தின் பிரகாரம் இலங்கைக் கைத்தொழில் மற்றும் உற்பத்திகளைப் பாதுகாக்கும் விதத்தில் ஒழுங்குவிதிகளை விதித்தல் மற்றும் வரையறுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக உள்நாட்டுச் சந்தைக்குள் வருகின்ற பொருட்களின் தரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு அந்தப் பொருட்கள் தர நிருணயத்திற்கு உட்படுத்தப்படுகின்ற அதேவேளையில்,இலங்கையின் தரச் சின்னத்தின் பெயரைஉலகச் சந்தைக்குள் நிலையாகத் தாபிக்கும் பொருட்டு ஏற்றுமதிப் பொருட்களுக்காகவும் தர நிருணயங்கள் விதிக்கப்பட்டுள்ளன. (உதாரணமாக ஏற்றுமதி செய்யப்படுகின்ற கருவா உற்பத்திகள் தர நிருணயத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளன).

இதற்கு மேலதிகமாக அன்னியச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துடன் இணைந்துஅன்னியச் செலாவணிகயைப் பாதுகாக்கும் விதத்தில்இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தேசிய சூழல் பாதுகாப்புக்காக பயன்படுத்தப்பட்ட சில பொருட்களை இறக்குமதி செய்வதை தடைசெய்யப்பட்ட அதேவேளையில், சில பொருட்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.பயன்படுத்தப்பட்ட குளிரூட்டி, வாயுசீராக்கி என்பவற்றின் இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ள அதேவேளையில், கிளைபோ.்.செட் போன்ற சூழலுக்குத் தீங்கான இரசாயணப் பொருட்களினது இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ளன.

இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்துகளின் தரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக கப்பலேற்றும் போது அவற்றின் ஆயுட் காலம் ⅔இற்குக் குறைவான மருந்துகளின்இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக தகரப் பேணிகளில் அடைக்கப்பட்ட ஒருசில உணவுப் பொருட்கள்,இரசாயணப் பொருட்கள், இறக்குமதி செய்யப்படுகின்ற பழங்கள் அதேபோன்று பல உணவுப் பொருட்களுக்கான தர நிருணயங்களை விதிப்பதினூடாக தரமான பொருட்களை உள்நாட்டுச் சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதனூடாக பொது மக்களின் பணம் மற்றும் சுகாதாரம் என்பவற்றைப் பாதுகப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும். எதிர்வரும் வருடங்களில் இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

# நோக்கு

சிறந்த எதிர்காலத்தின் பொருட்டு சூழலையும் மக்களையும் பாதுகாத்தல்.

# செயற்பணி

“நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், மக்கள் சுகாதாரம், சூழல் பாதுகாப்பு போன்றவற்றைக் கவனத்திற்கொண்டு, பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சம்பந்தமாக அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் எடுக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களை 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்துதல்”

## தொழிற்பாடுகள்

- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடு சம்பந்தமான அரசாங்கத்தின்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒழுங்கு விதிகளை வெளியிடுதல்.
- இறக்குமதி ஏற்றுமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு உட்பட்டு இறக்குமதியையும் ஏற்றுமதியையும் கட்டுப்படுத்துதல்.
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் சம்பந்தமான விடயங்களின் போது சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் அன்னியச் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கும் ஒத்துழைத்தல்
- வணிக வங்கிகளுக்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் சம்பந்தமான செயற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்குதல்.

## உற்பத்தியளவு

- 2015 ஆம் ஆண்டில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நாட்டினதும் அதன் பொருளாதாரத்தினதும் நன்மைக்காக 14916 அனுமதிப் பத்திரங்களை வழங்கி திணைக்களத்தின் செயற்பணியை நிறைவேற்றுதல்.
- இறக்குமதி அனுமதிப் பத்திரத்திற்கு அமைவாக பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளனவா என்பதைப் பற்றிய உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொண்ட பின்னர் 22724 பற்று வைத்தல்களின் மூலம்இறக்குமதிக் கட்டுப்பாட்டை முறைப்படுத்துதல்.
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுக் கொள்கையின் பிரகாரம் இறக்குமதி மீது அன்னியச் செலாவணி செலவாகாது என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற இறக்குமதிகளுக்காக அனுமதியளித்தல்.
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்களில் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும், அன்னியச் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கும் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடு சம்பந்தமாக வணிக வங்கிகளுக்கு செயற்பாட்டு வழிகாட்டல்களை வழங்குதல்.
- அனுமதிப் பத்திரங்களை வழங்கியதன் மூலம் பெறப்பட்ட கட்டணமாக ரூபா 1089 மில்லியன் வருமானத்தை திரட்டி அரசாங்கத்தின் இணைந்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.
- புதிய கணினி நிகழ்ச்சித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தி கணினித் தொகுதியை நவீனமயப்படுத்தல். புதிய கணினி மற்றும் துணைப் பாகங்களைத் தாபிப்பதன் மூலம் புதிய தகவல் களஞ்சியத் தொகுதியையும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரங்களை வழங்கும் முறையான கணினித் தொகுதியையும் தாபித்தல்.

## பதவியணி

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுஅனுமதிப் பத்திரங்களை வழங்குதல், பற்று வைத்தல் மற்றும் வருமானங்களைத் திரட்டுதல் போன்ற பணிகளும் அதேபோன்று பொதுவான அலுவலக நிருவாக நடவடிக்கைகள், கொள்கைகள் மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகளுக்காக பின்வரும் நிரந்தரப் பதவியணியின் சேவை பெற்றுக் கொள்ளப்படுகின்றது. (அட்டவணை இலக்கம் 01)

இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் சேவைகளை அதிகூடிய செயற்திறனுடன் மேற்கொள்வதற்கும், சேவைநாடிகளுக்கு வினைத்திறன்மிக்கதும் செயற்திறன்மிக்கதுமான நட்பான சேவையை வழங்குவதற்கும் இந்தப் பதவியணி வருடம் முழுவதும்பொறுப்புடன் ஒற்றுமையாக செயற்பட்டுள்ளனர்.

### 2015.12.31ஆம் திகதியில் உள்ளவாறான பதவியினர்

அட்டவணை இலக்கம் 01


| தொடர் இல. | பதவிப் பெயர், சேவை மற்றும் வகுப்பு | அனுமதிக்கப்பட்ட பதவியினர் | உண்மையான பதவியினரின் எண்ணிக்கை | வேறுபாடு/மிகை/வெற்றிடம் |
|---|---|---|---|---|
| 01 | பதவி நிலைத் தரம் | 10 | 07 | 03 |
| 02 | பதவி நிலையல்லாத தரம் | 58 | 53 | 05 |
| 03 | ஆரம்ப நிலை | 19 | 17 | 02 |
| | | | | |
| | மொத்தம் | **87** | **78** | **09** |

## தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம்

2014 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப் பகுதியை எடுத்துநோக்கும் போது விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு இரண்டு நாட்கள் சென்றன. இருப்பினும் 2014 ஆம் ஆண்டில் மென்பொருள் தொகுதி தாபிக்கப்பட்ட அதேவேளையில்,திணைக்களத்தின் பணிகள் அதன் மூலம் புதிய பாதையில் இட்டுச் செல்லப்பட்டது. தொடர்புடைய ஆவணங்களை சரியாகச் சமர்ப்பிக்கின்ற விண்ணப்பதாரர் ஒருவருக்குஇறக்குமதி,ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுஅனுமதிப் பத்திரத்தை இரண்டு மணித்தியாலத்திற்கும் குறைவான காலப்பகுதிக்குள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

புதியமென்பொருள் தொகுதி பிரதானமாக மூன்று கட்டங்களில்நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

முதலாவது கட்ட நடவடிக்கையாக இந்தக் கணினித் தொகுதியைத் தாபித்து வினைத்திறன்மிக்க சேவையொன்றை வழங்குவதற்குஎதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது அந்தப் பணிகளை முடிவுறுத்தி ஒரு மணித்தியாலத்தில் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்ற அதேவேளையில், பற்று வைக்கும் நடவடிக்கை முறைக்காக ½மணித்தியாலத்திற்கும் குறைவான குறைந்தளவு நேரமே செலவாகின்றது.





இரண்டாவது கட்ட நடவடிக்கையாக, மென்பொருள் தொகுதியை வெளிவாரியான நிறுவனங்களுடன் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. விசேடமாக, அனுமதிப் பத்திரக் கட்டுப்பாடு மற்றும் வழங்குதல் சம்பந்தமான செயல்முறையினுள் அதனோடு இணைந்துள்ள பாரிய எண்ணிக்கையிலான வெளிவாரியான நிறுவனங்கள் காணப்படுவதால் அந்த நிறுவனங்களுடன் நேரடியான தொடர்புகளைப் பேணுவதினூடாக மிகவும் விரிவடைந்த,நேர்த்தியான, வினைத்திறன்மிக்க சேவையைவழங்குவதற்குஎதிர்பார்க்கப்படுகின்றது.

உதாரணமாக:


1. இலங்கை சுங்கத் திணைக்களம்
2. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்
3. கிருமிநாசினி பதிவாளர் அலுவலகம்
4. தேசிய மருந்துக் கட்டுப்பாட்டுப் பிரிவு
5. தேசிய மருந்துஅதிகாரசபை
6. பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு

போன்ற பாரிய எண்ணிக்கையிலான வெளிவாரியான நிறுவனங்கள் இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுஅனுமதிப் பத்திரத்தை வழங்கும் செயல்முறையுடன் தொடர்புபடுகின்றன. திணைக்களத்தின் கணினித் தொகுதியை இந்த நிறுவனங்களுடன் நேரடியாகத் தொடர்புபடுத்துவதினூடாக வினைத்திறன்மிக்க சேவையையும் அதேபோன்று முறைகேடுகளற்ற சூழலையும் உருவாக்குவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என அடையாளங் காணப்பட்டுள்ளது.




இரண்டாவது கட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற இந்த வேலைத் திட்டத்தினுள் ஏற்கனவே இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் இந்தத் திணைக்களத்தின் கணினித் தொகுதி இணைக்கப்பட்டுள்ள அதேவேளையில், அதன் மூலம்இந்தத்திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற எந்தவொரு அனுமதிப் பத்திரத்தினதும் உண்மைத் தன்மையை சுங்கத் திணைக்களத்தின் எந்தவொரு பின்விளைவையும் ஒரே சூழலுக்குள் இருந்து உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

அதன் பிரகாரம்,இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுஅனுமதிப் பத்திரத்தின் அடிப்படையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களின் உண்மைத் தன்மையை 100% சதவீதத்தைக் கொண்டதாக பொருட்களை விடுவிப்பதற்கு இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.




2016 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் அனுமதிப் பத்திரக் கட்டுப்பாட்டுச் செயல்முறையுடன் இணைந்துள்ள ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் கணினித் தொகுதியை இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மூன்றாவது கட்டமாக எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் இறக்குமதி அல்லது ஏற்றுமதிவிண்ணப்பத்தை இணையத் தளத்தினூடாக சமர்ப்பிக்கும் ஆற்றலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், தொடர்புடைய அனுமதிப் பத்திரக் கட்டணத்தையும் இணையத் தளத்தினூடாகவே செலுத்தும் ஆற்றலை வழங்குவதற்கும் இதன் மூலம் வாய்ப்பினை வழங்குவதற்குஎதிர்பார்க்கப்படுகின்றது.

## பயிற்சியளித்தல் மற்றும் திறன் விருத்தி

திணைக்களத்தின் அலுவலர்களின் அறிவு மற்றும் மனப்பாங்குகளை விருத்தி செய்து சேவைகளை வழங்குவதனை அதிகூடிய வினைத்திறனும் செயற்திறனும்பேணுவதற்காக 2015 ஆம் ஆண்டினுள் பின்வரும் விதமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிக்காக அலுவலர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

### உள்நாட்டுப் பயிற்சி

**I. பதவி நிலை அலுவலர்கள்**

- Training Programme on regulatory frame work applicable to Imports & Exports -01
- Certificate in English for Professionals –Level 1 -01
- Workshop on HR Strategy to buildup managerial skills in the public sector -01

**II. முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அலுவலர்கள்**

- National IT Conference 2015 -01

### வெளிநாட்டுப் பயிற்சி

| அலுவலரின் பெயர் | பயிற்சிக் கற்கைநெறி |
|---|---|
| செல்வி. ஐ.என்.வீரசேகர - உதவிக் கட்டுப்பாட்டாளர் | 1. Pre-shipment and cracking down on fake and counterfeit product for developing countries – China<br>2. International programme on Advanced Management – AIT Bangkok – Thailand |
| திருமதி. எச்.எம்.பீ.சீ. குமாரிஹாமி - உதவிக் கட்டுப்பாட்டாளர் | 1. Investment & Trade Facilitation – Singapore |
| திருமதி. பீ.எல்.ஜீ. குணரத்ன - உதவிக் கட்டுப்பாட்டாளர் | 1. Seminar on quality and safety management of agricultural exports for developing countries – Mongolia<br>2. International programmeon Advance Management – AIT Bangkok –Thailand |
| செல்வி. கே.என்.கே. வித்தியாலங்கார - உதவிக் கட்டுப்பாட்டாளர் | 1. Training programme on Quality infrastructure development in support of world trade – Sweden<br>2. Seminar on Import and Export food inspection officials for developing countries – China |
| செல்வி. டீ.சீ. ஜயமாலி ஜயதுங்க – கொள்கை மற்றும் திட்டமிடல் உதவியாளர் | 1. Association of Export and Import Enterprises for developing countries - China |

## சேவைகளை மேம்படுத்துதல்

திணைக்களத்தின் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு நிறுவனக் கட்டமைப்பை மாற்றுதல், வினைத்திறன்மிக்க கணினி தொகுதியொன்றை அறிமுகப்படுத்தல்,பதவியணியின் ஆற்றல்களையும் திறன்களையும் மேம்படுத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவத்தை வழங்குவதிலிருந்து அனுமதிப் பத்திரத்தை வழங்குவது வரையும் அனுமதிப் பத்திரத்தை பற்று வைப்பதற்கு முறைப்படுத்தல்களைச் செய்யக்கூடிய தன்னியக்க கணினி வேலைத் திட்டமொன்றைக் கண்காணிப்பது வரையும் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.இதில் பற்றுச் சீட்டு வழங்குவதும் உள்ளடங்கியுள்ளது.

அனுமதிப் பத்திரத்தை வழங்குதல் மற்றும் பற்று வைத்தல் தகவல்களை உடனடியாக இலத்திரனியல் மூலம் இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும் பற்று வைத்தல் பற்றி தகவலை சுங்கத் திணைக்களத்திடமிருந்து பெற்று, பற்று வைத்தல் செயல்முறையை இலகுப்படுத்துவதற்கும் இந்தக் கணினி தொகுதி இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கணினி தொகுதி அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கான அனுமதியையும் பரிந்துரைகளையும் வழங்குகின்ற நிறுவனங்களுடன் நேரடியாக இணைக்கப்படுகின்ற அதேவேளையில், இந்த அனுமதிப் பத்திரம் வழங்கும் செயல்முறையுடன் இணைவதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு இலகுவானதும் துரிதமானதுமான சேவையொன்றை வழங்கக் கூடியதாக இருக்கும்.

அதேபோன்று சேவைகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற நேரடியானதும் மறைமுகமானதுமான நடவடிக்கைகளினூடாக வர்த்தக சமூகத்திற்கும் அதேபோன்று பொது மக்களுக்கும் சமமாகவும் பக்கச்சார்பின்றியும் சேவைகளை வழங்கக் கூடியதாக இருக்கின்ற அதேவேளையில், தற்போது திணைக்களத்திற்கும் அவ்வாறான சேவைகளை சரியாகவும் உற்பத்தித்திறனுடனும் செயற்திறனுடனும் நிறைவேற்றுவதற்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

## 2015 ஆம் ஆண்டினுள் வெளியிடப்பட்ட புதிய ஒழுங்குவிதிகள்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பற்றிய அரசாங்கத்தின் கொள்கையை நடைமுறைப்படுத்தி புதிய ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கு பின்வரும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

அட்டவணை இலக்கம் 02

| அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்ட திகதி | அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் | உள்ளடக்கம் |
|---|---|---|
| 29.01.2015 | 1899/34 | இயைபுமுறைக் குறியீட்டு இலக்கங்களின் கீழ் காணப்படுகின்றமோட்டார் வாகனங்களின் விபரங்களை திருத்தத்திற்கு உட்படுத்துதல். |
| 26.02.2015 | 1903/41 | மோட்டார் வாகனங்கள் சம்பந்தமான இயைபுமுறைக் குறியீட்டு இலக்கங்களை திருத்தத்திற்கு உட்படுத்துதல். |
| 30.04.2015 | 1912/31 | பாக்கு,இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுஅனுமதிப் பத்திரத் தேவைப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. |

| | | |
|---|---|---|
| 03.06.2015 | 1917/24 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுஅனுமதிப் பத்திர மற்றும் மேலதிகக் கட்டணங்களைத் திருத்துதல். |
| 11.06.2015 | 1918/22 | இலங்கைக்கான கிளைபோ.்.சேட் இறக்குமதியைத் தடைசெய்தல். |
| 18.06.2015 | 1919/45 | பாக்குக்கான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுஅனுமதிப் பத்திரக் கட்டணங்களைத் திருத்துதல். |

## 2015 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அறவிடப்பட்ட அனுமதிப் பத்திரக் கட்டணம்

அட்டவணை இலக்கம் 03

| இல | விபரம் | குறியீட்டு இலக்கம் | அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | அனுமதிப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|---|
| **அலகு 01 - மருந்துகள்** | | | | |
| 1 | மேற்கத்தேய மருந்து | 400 | 1928 | 78,318,085.47 |
| 2 | கால்நடை | 410 | 415 | 4,556,846.01 |
| 3 | ஆயுர்வேத | 420 | 203 | 670,363.57 |
| 4 | ஹோமியோபத்தி | 430 | 08 | 11,113.04 |
| 5 | சத்திர சிகிச்சை உபகரணம் | 450 | 178 | 2,438,451.21 |
| **உப மொத்தம்** | | | **2732** | **85,994,859.30** |
| **அலகு 02 - வாகனங்கள்** | | | | |
| 6 | அன்னியச் செலாவணியை சம்பாதிப்பதன் அடிப்படையில் | 100 | 08 | 410,494.50 |
| 7 | வெளிநாட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் பரிசு | 110 | - | - |
| 8 | வெளிநாட்டவர்களினால் இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் | 120 | 01 | 4381.30 |
| 9 | தூதரக அலுவலகங்கள் | 130 | 01 | 1441.90 |
| 10 | அங்கவீனர்களுக்கான பரிசுகள் | 140 | 02 | 84,143.55 |
| 11 | சமூக சேவை அமைப்புக்களின் பரிசுகள் | 150 | 11 | 439,282.50 |
| 12 | வதிவிட வெளிநாட்டவர்கள் | 160 | 02 | 92,110.04 |
| 13 | புனித ஸ்தளங்களுக்கான வாகன இறக்குமதி | 170 | 01 | 166,500.00 |
| 14 | விசேட பணி இயந்திரம் | 180 | 32 | 25,638,884.48 |
| 15 | மோட்டார் ட்ரேலர்ஸ் (பயன்படுத்தப்பட்ட) | 185 | 01 | 249,750.00 |
| 16 | ஏற்றுமதி மேம்பாட்டுக்கான தற்காலிக இறக்குமதி | 190 | 01 | 33,300.00 |
| 17 | பிரேத வண்டி | 200 | 07 | 360,750.00 |
| 18 | விமானத்திற்கான / ஹெலிகொப்டருக்கான உதிரிப் பாகங்கள் | 210 | 71 | 235,252.03 |
| 19 | இயந்திரம் | 220 | 1 | 1120.00 |
| 20 | கெபின் | 230 | 36 | 127,681,606.95 |
| 21 | பொடிஷெல் | 235 | 18 | 560,074.93 |
| 22 | பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் | 240 | 20 | 312,576.73 |
| 23 | நானாவித | 250 | 145 | 20,181,640.57 |
| 24 | தூதரக சேவை அலுவலர்கள் இறக்குமதி செய்கின்ற வாகனங்கள் | 260 | 17 | 129,295.81 |
| 25 | கனரக வாகனங்கள் | 270 | 123 | 37,942,954.39 |
| 26 | கனரக வாகனங்கள்(LC Permit) | 275 | 04 | 34,410.00 |
| 27 | வாகன உதிரிப் பாகங்கள் | 280 | 28 | 349,545.38 |
| 28 | டயர் | 285 | 11 | 63,623.21 |
| 29 | செசி | 290 | 27 | 7,721,227.12 |
| 30 | ஆசனம் | 320 | 171 | 13,036,746.24 |

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | பரிசீலனை செய்யும் போதான நிபந்தனைகளுக்கு இணங்காமை | 321 | - | - |
| **உப மொத்தம்** | | | **739** | **235,731,111.63** |
| **அலகு 03 - இரசாயணப் பொருட்கள்** | | | | |
| 32 | இரசாயணப் பொருட்கள் | 500 | 1074 | 9,224,237.59 |
| 33 | பெற்றோலிய உற்பத்திகள் | 510 | 920 | 157,778,397.15 |
| 34 | களைக் கொல்லி | 520 | 1373 | 45,388,499.92 |
| 35 | கதிரியக்கப் பொருட்கள் | 530 | 76 | 405,062.56 |
| 36 | மதுசாரம் | 540 | 285 | 21,571,304.61 |
| 37 | விலங்கு உற்பத்திகள் | 550 | - | - |
| 38 | தானியங்கள் | 570 | 116 | 12,871,996.28 |
| **உப மொத்தம்** | | | **3844** | **247,239,498.11** |
| **அலகு 04 - தொலைத் தொடர்பு உபகரணங்கள் மற்றும் ஏனையவை** | | | | |
| 39 | சிகரட் கடதாசி | 670 | 6l1 | 473,314.58 |
| 40 | கணினி | 625 | 189 | 25,344,814.90 |
| 41 | குளிரூட்டல் வாயு வகை | 640 | 30 | 123,918.39 |
| 42 | அச்சு இயந்திரம் மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரம் | 690 | 157 | 1,141,959.90 |
| 43 | தூரக் கட்டுப்பாட்டு விளையாட்டுப் பொருட்கள் | 660 | 124 | 199,668.91 |
| 44 | தொடர்பாடல் உபகரணம் மற்றும் செல்லிடத் தொலைபேசிகள் | 620 | 2068 | 34,998,764.81 |
| 45 | குளிரூட்டி இயந்திரம்,பயன்படுத்தப்பட்ட குளிர்சாதன மற்றும் ஆழ் உறை குளிர்சாதனப் பெட்டி | 630 | 53 | 260,261.96 |
| 46 | பயன்படுத்தப்பட்ட சலவை இயந்திரங்கள் | 635 | 28 | 1,210,049.22 |
| 47 | காலநிலை பலூண் | 695 | 03 | 12,873.08 |
| 48 | வாயு சீராக்கிகள்(புத்தம் புதியவை) | 645 | 39 | 724,138.31 |
| 49 | செல்லிடத் தொலைபேசிகள்(பயன்படுத்தப்பட்டவை / புத்தம் புதியவை) | 615 | 1586 | 186,082,866.49 |
| | | | **4338** | **250,572,630.55** |
| **உப மொத்தம்** | | | | |
| **அலகு05 - நானாவிதஇறக்குமதி மற்றும் ஏற்றுமதி** | | | | |
| 50 | விமானத்திற்கானஉதிரிப் பாகங்கள் | 210 | 11 | 365,330.26 |
| 51 | மதுசாரம் | 540 | 49 | 1,822,025.39 |
| 52 | விலங்கு மற்றும் விலங்கு உற்பத்தி | 550 | 1567 | 27,412,143.63 |
| 53 | தேயிலை | 570 | 187 | 1,689,243.44 |
| 54 | இரசாயணப் பொருட்கள் மற்றும் களைக் கொல்லி | 500 | 32 | 135,443.46 |
| 55 | இரசாயணப் பொருட்கள், விவசாய இரசாயண களைக் கொல்லி | 520 | 54 | 261,052.32 |
| 56 | காசு | 610 | 02 | 2,208,792.99 |
| 57 | வெடி பொருட்கள் மற்றும் ஆயுதங்கள் | 600 | 169 | 1,339,622.99 |
| 58 | உலோகத் துண்டு, சிதைவுகள் மற்றும் ஏனையவை | 715 | 18 | 715,575.86 |
| 59 | உலோகச் சிதைவுகள் | 710 | 209 | 6,684,145.43 |
| 60 | நானாவித | 250 | - | - |
| 61 | பெற்றோலிய மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் | 510 | 25 | 80,329.12 |
| 62 | மர எண்ணெய் | 700 | 418 | 3,682,705.23 |
| 63 | பயன்படுத்தப்பட்ட ஆடைகள் | 720 | 65 | 141,728.53 |
| 64 | விளையாட்டுப் பொருட்கள் | 650 | 08 | 38,392.65 |
| 65 | தொடர்பாடல் உபகரணம் மற்றும் செல்லிடத் தொலைபேசிகள் | 620 | 177 | 31,285,540.37 |
| 66 | கிழிக்கப்பட்ட மரத்தின் பகுதிகள் | 602 | 10 | 14,430.04 |
| 67 | பயன்படுத்தப்பட்ட தளபாடங்கள் | 680 | 58 | 3,365,854.40 |
| 68 | அகற்றப்பட்ட சிலிண்டர் | 640 | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 69 | பிளாஸ்டிக் சாப்பாட்டுப் பெட்டி | 730 | - | - |
| 70 | கதிரியக்கப் பொருட்கள் | 530 | - | - |
| 71 | தேயிலை | 580 | 204 | 9,323,760.79 |
| 72 | ஏற்றுமதிகள் | 605 | 01 | 5,549.99 |
| 73 | கிழிக்கப்பட்ட பலகை | 440 | 01 | 2,220.00 |
| 74 | சேதனப் பசளை | 735 | 09 | 322,411.01 |
| **உப மொத்தம்** | | | **3274** | **90,896,297.90** |
| **முழு மொத்தம்** | | | **14,927** | **910,434,397.49** |

## வருமானப் பகுப்பாய்வு- 2015

திணைக்களமானது, 2015 ஆம் ஆண்டில் ரூபா 1089 மில்லியன் வருமானத்தைச் ஈட்ட கூடியதாக இருந்துள்ளது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் 68.9% சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அது பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அனுமதிப் பத்திர வருமானம் - ரூபா.1,089,153,993.23

மேற்குறிப்பிட்டவருமானம் மேலதிகக் கட்டணங்கள் மற்றும் திருத்தப்பட்ட கட்டணங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

### I. வருமானம் - 2015

வருமானம் சம்பந்தமான விபரம் பின்வரும் அட்டவணை 03 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை இலக்கம் 04

| விபரம் | 2014உண்மை வருமானம் ரூபா. | 2015 அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2015 திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2015உண்மை வருமானம் ரூபா. |
|---|---|---|---|---|
| இறக்குமதி ஏற்றுமதி அனுமதிப் பத்திரக் கட்டணம் | 751,552,566,055 | 800,000,000 | 900,000,000 | 1,089,153,993 |

### II. வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்தப்பட்டது- 2015

அட்டவணை இலக்கம் 05

| விபரம் | தொகைரூபா. |
|---|---|
| திருப்பிச் செலுத்தல் - இறக்குமதி ஏற்றுமதி அனுமதிப் பத்திரக் கட்டணம் | 38,115.41 |

## செலவினப் பகுப்பாய்வு– 2015

### I. மீண்டுவரும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம்

2014 ஆம் ஆண்டுக்காக ரூபா 54.83 மில்லியன் மீண்டுவரும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரூபா 54.40 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அது மொத்த ஏற்பாட்டில் 99.22% ஆகும். விபரங்கள் பின்வரும்அட்டவணை இலக்கம் 06 இல் காட்டப்பட்டுள்ளது.

தலைப்பு இலக்கம் : 296

அமைச்சு : அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு–இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் தினைக்களம்

நிகழ்ச்சித் திட்ட இலக்கம் : 01

கருத்திட்டம் : 01

அட்டவணை இலக்கம் 06

| விபரம் | 2014உண்மை செலவினம் ரூபா. | 2015அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2015திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2015உண்மை செலவினம் ரூபா. | ஏற்பாட்டின் பயன்பாடு % |
|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 31,537,653 | 31,400,000 | 40,980,000 | 39,284,605 | 96% |
| ஏனைய மீண்டுவரும் | 14,446,621 | 16,720,000 | 17,319,260 | 15,106,544 | 87% |
| மீண்டுவரும்செலவினத்தின் மொத்தம் | 45,984,274 | 48,120,000 | 58,299,260 | 54,391,149 | 93% |
| மூலதனம் | | | | | |
| 2001 - கட்டட நிர்மாணம் | - | - | - | - | - |
| 2003 - வாகனங்கள் | 181,948 | 300,000 | 300,000 | 16,216 | 5% |
| 2102 - தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 7,561,692 | 4,000,000 | 4,000,000 | 2,331,252 | 58% |
| 2401 - பயிற்சியளித்தல் மற்றும் திறன் விருத்தி | 679,000 | 600,000 | 600,000 | 308,000 | 51% |
| மூலதனச் செலவு மொத்தம் | 8,422,640 | 4,900,000 | 4,900,000 | 2,655,468 | 54% |
| முழு மொத்தம் | 54,406,914 | 53,020,000 | 63,199,260 | 54,046,616 | 90% |

## II. நிதி மூலங்கள்

இணைந்த நிதியத்தின் மூலம் உள்நாட்டு நிதியத்தின் கீழ் ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்ட தொகையை செலவிடும் போது வினைத்திறனுடனும் உற்பத்தித்திறனுடனும் செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ( அட்டவணை இலக்கம் 07)

அட்டவணை இலக்கம் 07

| விபரம் | 2014உண்மை செலவினம் ரூபா. | 2015அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2015திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2015உண்மை செலவினம் ரூபா. |
|---|---|---|---|---|
| இணைந்த நிதியம் 11 - உள்நாட்டு நிதியம் | 54,406,915.14 | 53,020,000.00 | 63,199,260.00 | 57,046,616.00 |
| மொத்தச் செலவினம் | 54,406,915.14 | 53,020,000.00 | 63,199,260.00 | 57,046,616.00 |


## வருமானம் மற்றும் செலவினப் பகுப்பாய்வு - 2015

திணைக்களம்ரூபா 57 மில்லியன்களை செலவிட்டு ரூபா 1089மில்லியன் வருமானத்தைச் சம்பாதித்துள்ளது. பின்வரும் அட்டவணையின் மூலம் அத்தகவல்கள் காட்டப்பட்டுள்ளது. (அட்டவணை இலக்கம் 08)

அட்டவணை இலக்கம் 08

| மாதம் | வருமானம்(ரூபா) | செலவினம் (ரூபா) |
|---|---:|---:|
| சனவரி | 56,200,504.48 | 4,369,748.35 |
| பெப்ரவரி | 29,962,826.15 | 3,727,664.79 |
| மார்ச் | 47,995,720.32 | 5,063,375.45 |
| ஏப்ரல் | 42,454,665.37 | 4,524,313.40 |
| மே | 115,400,884.27 | 4,483,331.13 |
| ஜூன் | 80,370,640.05 | 5,367,216.80 |
| ஜூலை | 121,621,329.95 | 5,208,137.12 |
| ஆகஸ்ட் | 113,372,259.51 | 4,743,589.80 |
| செப்டெம்பர் | 120,801,333.66 | 4,718,719.75 |
| ஒக்டோபர் | 118,615,894.50 | 4,622,575.59 |
| நவம்பர் | 100,571,005.67 | 4,538,154.44 |
| டிசம்பர் | 141,786,929.30 | 5,679,789.77 |
| **மொத்தம்** | **1,089,153,993.23** | **57,046,616.39** |

**வருமானம் மற்றும் செலவினப் பகுப்பாய்வு – 2015**



## கடந்த 5 வருடக் காலப் பகுதியில் வழங்கப்பட்ட அனுமதிப் பத்தி எண்ணிக்கை மற்றும் உருவாக்கப்பட்ட வருமானம்


அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை **(**வரைபு I ஐப் பார்க்க**)**

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| மருந்துகள் | 1652 | 1823 | 2104 | 2500 | 2732 |
| வாகனங்கள் | 1607 | 1606 | 1288 | 958 | 739 |
| இரசாயணப் பொருட்கள் | 3623 | 3767 | 4301 | 4339 | 3844 |
| தொலைத்தொடர்பு உபகரணங்கள் | 3807 | 3468 | 3406 | 3523 | 4338 |
| ஏனைய இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் | 675 | 934 | 1427 | 2148 | 3274 |


அனுமதிப் பத்திரங்களின் வருமானம் **(ரூபா)** (வரைபு II ஐப் பார்க்க)

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| மருந்துகள் | 83,513,399 | 98,973,707 | 83,036,455 | 124,551,191 | 165,323,691 |
| வாகனங்கள் | 117,007,354 | 141,991,581 | 125,202,590 | 159,721,793 | 311,027,758 |
| இரசாயணப் பொருட்கள் | 171,284,655 | 220,405,559 | 190,727,940 | 298,927,118 | 248,677,073 |
| தொலைத்தொடர்பு உபகரணங்கள் | 49,327,806 | 39,543,218 | 46,973,837 | 57,901,028 | 262,610,141 |
| ஏனைய இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் | 11,349,653 | 11,757,369 | 12,059,178 | 28,414,399 | 94,895,008 |
| கொள்கை | | | | | 6,620,319 |

**வரைபு I**



வரைபு II




## கடந்த 5 வருடக் காலப் பகுதியில் வருமானம் மற்றும் அனுமதிப் பத்திரத் தரவுகள் பற்றிய மீளாய்வு

3ஆம் இலக்க அட்டவணையின் பிரகாரம்,கடந்த 5 வருடக் காலப் பகுதியில் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள அதேவேளையில், 2013 ஆம் ஆண்டில் அதன் வருமானத்திலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுகின்றது.

2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் இறக்குமதிக்காக வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்த போதிலும், அனுமதிப் பத்திரங்களின் மூலம் பெறப்பட்ட வருமானம் துரிதமாக அதிகரித்துள்ளது. பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் இறக்குமதிக்காக அறவிடப்படுகின்ற அனுமதிப் பத்திரக் கட்டணங்களை அதிகரித்தல் மற்றும் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கைரீதியான தீர்மானமும் இதற்குக் காரணமாக அமைந்துள்ளன.

2014ஆம் ஆண்டில் இரசாயணப் பொருட்களின் இறக்குமதிக்காக அதிகளவான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு, அதன் மூலம் அதிகளவான வருமானத்தைஈட்டிய வருடமாக பதிவாகிய போதிலும், 2015 ஆம் ஆண்டில் அந்த அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கையும் வருமானமும் வீழ்ச்சியடைந்துள்ளது. இரசாயணப் பொருட்களிடையே மசகு எண்ணெய் உற்பத்தி முன்னுரிமையைப் பெறுகின்ற அதேவேளையில், அது உள்நாட்டின் உற்பத்தி நடவடிக்கைகளில் தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் உள்நாட்டின் பொருளாதார உற்பத்தித் துறை சிறிய அளவிலான விரிவாக்கத்தை மாத்திரம் காட்டியுள்ள அதேவேளையில், அது இரசாயணப் பொருட்களின் இறக்குமதியில் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது.

தொலைத்தொடர்பு உபகரணங்களைப் பற்றிக் கவனத்திலெடுக்கும் போது, வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கையைப் போன்று அதன் மூலம் சம்பாதிக்கப்பட்ட வருமானமும் துரித வளர்ச்சியொன்றைக் காட்டியுள்ளது. தொலைத்தொடர்பு உபகரண இறக்குமதியில் செல்லிடத் தொலைபேசிகளின் இறக்குமதி முன்னுரிமையைப் பெற்றுள்ளது. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் தொலைத்தொடர்புத் துறையில் சாதனைமிக்க வளர்ச்சியொன்றைக் காட்டியுள்ள

அதேவேளையில்,அவ்விரு வருடங்களிலும் பல பாரிய அளவிலான கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் செல்லிடத் தொலைபேசிகள் போன்ற ஏனைய இறக்குமதிகள் 2015 ஆம் ஆண்டில்அதிகரித்துள்ள அதேவேளையில், முதலீட்டுச் சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்காக அந்த உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரங்களை வழங்கும் நோக்கில் 05 பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2015.06.03 ஆம் திகதிய 1917/24எனும் இலக்கத்தைக் கொண்ட வர்த்தமானிப் பத்திரத்திற்கு அமைவாக கொள்கைப் பிரிவினால் கொள்கை ரீதியான அனுமதிகளை வழங்குவதற்காக கட்டணம் அறவிடுவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 07 மாத காலப் பகதிக்குள் கொள்கைப் பிரிவின் அனுமதிகளுக்காக அறவிடப்பட்ட வருமானம் ரூபா 6.6 மில்லியனாகப் பதிவாகியுள்ளது.

## அரசாங்க அலுவலர்களின் முற்பண கணக்கு- 29601


2015 ஆம் ஆண்டினுள் இந்தத் திணைக்களத்தின் அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கை அனுமதிக்கப்பட்ட எல்லையின் கீழ் பேணப்பட்டுள்ளது. ( அட்டவணை இலக்கம் 09)

தலைப்பு இலக்கம் : 296

அமைச்சு : அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு- இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

அட்டவணை இலக்கம் 09

| விபரம் | 2014 உண்மைச் செலவு | 2015அனுமதிக்கப்ப மதிப்பீடு | 2015 திருத்தப்பட்ட மதிப்பீடு | 2015 உண்மைச் செலவு |
|---|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 12,783,664.00 | | | 14,383,047.50 |
| கூட்டப்பட்டது :- | | | | |
| வருடத்தின் மொத்தப் பற்று | 3,354,428.00 | 4,000,000.00 | 4,415,000.00 | 2,117,046.80 |
| கூட்டப்பட்டது :- | | | | |
| மாற்றல் | 2,195,304.50 | | | 1,649,203.00 |
| மொத்தம் | 18,333,396.50 | | | 18,149,297.30 |
| கழிக்கப்பட்டது:- | | | | |
| வருடத்தின் மொத்தப் பற்று | 2,367,557.00 | 2,000,000.00 | 2,200,000.00 | 3,121,696.00 |
| கழிக்கப்பட்டது:- | | | | |
| மாற்றல் | 1,582,792.00 | | | 2,803,235.00 |
| இறுதிப் பற்று மீதி | 14,383,047.50 | | | 12,224,366.30 |




Controller General - 01
Import and Export Controller - 01
AC : Assistant Controller - 07

Accountant - 01
AO : Administrative Officer - 01
ITO : Information Technology Officer - 01
IA/DO Investigation Assistant or Development Officer - 06

H Clerk : Head Clerk (MA) - 07
MA : Management Assistant - 46
CMA : Chief Management Assistant - 02
RA : Research Assistant - 01

ITA : Information Technology Assistant - 01
DMA : Data Management Assistant - 01
PA : Policy & Planning Assistant - 01
BA : Budget Assistant - 01
OES : Office Employee Service - 15
Drivers - 04